# CANADA வாக்குகள்

## 2015 மத்திய அரசுத் தேர்தல் செய்தியறிக்கை: வேலை வாய்ப்புகள் மற்றும் பொருளாதாரம்

## பிரச்சினை

உலகளாவிய, 2008–09 பொருளாதாரப் பின்னடைவு, கனேடியப் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பில் அதன் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. தொழில்புரிவோரின் விகிதாசாரம் குறைந்து கொண்டிருகின்றது. வேலைகளின் தரம் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. அதிகளவிலான மக்கள் நிரந்தரமற்ற வேலையில் இருக்கின்றனர். மத்திய அரசாங்கம், பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பில் முதலிடாமல், திட்டம் மற்றும் சேவைக் குறைப்புக்கள் மூலம் கடன் குறைப்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்துகின்றது.

## நிலைமை

வேலைவாய்ப்பு வீதம், வேலைசெய்பவர்களின் விகிதத்தை அளக்கின்றது, 2008, பெப்ரவரியில் 63.7% ஆக இருந்த இது, 2015 பெப்ரவரியில் 61.3% ஆகக் குறைந்துள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக, வேலைவாய்ப்பில் எந்தவித அதிகரிப்பும் இல்லாமல் இருக்கின்றது. வேலையற்ற பலர் வேலை தேடுவதைக் கைவிட்டுள்ளனர் அல்லது நிரந்தரமற்ற வேலைக்குச் செல்வதற்கு வற்புறுத்தப்பட்டுள்ளனர்.

இரண்டு பிரதானமான கனடா வங்கிகளின் அறிக்கைகளின்படி, 2008 பொருளாதாரப் பின்னடைவின் பின்னர், நிரந்தரமற்ற வேலையின் அளவு, குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. குறைவான வேதனம், நன்கு எதிர்வுகூற முடியாத வருமானம் மற்றும் வேலை அட்டவணை என்பவற்றுடன் தரம் குறைந்த தொழில்கள் பொதுவாகத் தொடர்புடையனவாக இருக்கின்றன. நிரந்தமற்ற வேலையின் நிச்சயமின்மையும் நிலையற்ற தன்மையும் தனிநபர்களினதும் குடும்பத்தவரினதும் மன அழுத்தத்தை அதிகரிக்கின்றன. நிரந்தரமற்ற வேலை தனிநபர்களையும் குடும்பத்தவர்களையும் வறுமையில் வைத்திருக்கின்றது.

மந்தமான பொருளாதாரம் மற்றும் பலவீனமான தொழில் சந்தையைச் சமாளிப்பதற்காக, பல்வேறு துறைகளிலிருந்தும் வந்த அழைப்புகளை மத்திய அரசாங்கம் புறக்கணித்துள்ளது. மாறாக, 28,000க்கும் மேற்பட்ட பொதுச் சேவைத் தொழில்களை இல்லாமல் செய்ததுடன் ஆரோக்கியப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் பரிசோதிப்பு, மனித உரிமைகள், ஓய்வு பெற்ற படைவீரர்களுக்கான விவகாரங்கள், விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சி போன்ற பகுதிகளில் சேவைகளையும் குறைத்திருக்கும், சிக்கனமான வரவு செலவுத் திட்டங்களை அது தொடர்ச்சியாகத் தயாரித்துள்ளது.

அதே நேரத்தில், நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கான வரிக் குறைப்பினால், அது பல பில்லியன் டொலர் வருவாயை இழந்துள்ளது. 2013ம் ஆண்டில், பொருளாதாரம் மற்றும் தொழில் உருவாக்கத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய, பயன்படுத்தப்படாத $ 626 பில்லியன் பணத்தை Corporate Canada வைத்திருந்தது.

வாக்களித்தல் என்பது, கனடாவின் பொருளாதாரம் மற்றும் தொழில் தரம் பற்றி, தனிநபர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தும் ஒரு சந்தர்ப்பம் ஆகும். பொருளாதார வளர்ச்சி மற்றும் தரமான வேலைகளுக்கு மிகுந்த முன்னுரிமை கொடுக்கும் அரசாங்கத்தை அவர்கள் தேர்ந்தெடுக்க முடியும். நியாயமான, அனைவரையும் கருத்தில் கொள்ளும் வரி முறைமை ஒன்றை உருவாக்கும் ஒரு அரசாங்கத்தை அவர்கள் தெரிவுசெய்ய முடியும்.

## கேள்விகள்

1. வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் தொழில் தரத்தை மேம்படுத்தவும் உங்களுடைய கட்சி என்ன செய்யும்?

2. பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு வளர்ச்சியையா அல்லது வரவு செலவுத் திட்டத்தச் சமப்படுத்தலையா உங்களுடைய கட்சி ஆதரிக்கின்றது?

3. தனிநபர்கள், வர்த்தகங்கள் ஆகிய இரு பகுதியினருக்குமான, மிகவும் நியாயமான, முற்போக்கான வரி முறைமை ஒன்றை உங்களுடைய கட்சி ஆதரிக்கின்றதா?

## ஆதாரவளங்கள்:

இந்தத் தொடர் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதலான தரவுத்திரட்டுத் தாள்களுக்கு: http://spno.ca/canada-votes-2015

இந்தத் தொடரைத் தயாரித்தவர்கள்: Canadian Council on Social Development, Community Development Council Durham, CommunityDevelopment Halton, Edmonton Social Planning Council, Saint John Human Development Council, Social Planning and Research Council ofBC,SocialPlanningandResearchCouncilofHamilton,SocialPlanningCouncil ofCambridgeandNorthDumfries,SocialPlanningCouncil of Kitchener-Waterloo, Social Planning Network of Ontario, & Social Planning Toronto.

மொழிபெயர்ப்பு : MCIS மொழிச்சேவைகள் – இலாபகரமற்ற அமைப்பு

www.mcislanguages.ca

தேர்தல் நாள்:ஒக்ரோபர்19,2015